DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.12/2025**

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 09- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | அரசு பேருந்து நடத்துனர் |
| பெயர் | - | பெரியசாமி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பொன்னன் | சமயம் | - | |
| கிராமம் | - | கக்கன் காலனி, வால்பாறை | வயது | - | 51/2025 |
| சாதி | - | | | | |

**09-09-2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வால்பாறை அரசு போக்குவரத்து கழகத்தில் பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை சம்பவத்தன்று பார்த்தேன். கடந்த 26.12.2024-ம் தேதி மாலை 05.30 மணிக்கு நானும், ஓட்டுநர் ஜெயராஜ் என்பவரும் அரசு பேருந்தை வால்பாறையில் இருந்து ஷேக்கல்முடி எஸ்டேட்டிற்கு செல்வதற்காக பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டு ஷேக்கல்முடி சென்று கொண்ருந்தபோது, பழைய வால்பாறை பஸ் ஸ்டாப் அருகில் ஷேக்கல்முடி ரோட்டில் பேருந்து பழுதாகி நின்றுவிட்டது. ஓட்டுநர் என்னிடம் பேருந்து ஸ்டாட் ஆகிறது ஆனால் நகரவில்லை என்று கூறி AE -யிடம் பேசுமாறு கூறினார். அப்போது நேரம் சுமார் 06.15 மணியிருக்கும். நான் வால்பாறை கிளை AE டென்னிஸ் ஜோகுமார் அவர்களுக்கு போன் செய்து பேருந்து பழுதான விவரத்தை போனில் தெரிவித்து, பள்ளிக் குழந்தைகள் பேருந்தில் இருந்ததால் மாற்று பேருந்து விரைவில் ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொண்டிருந்தேன். ஆஜர் எதிரி அப்போது, என்னை ஏண்டா போனில் பேசிக்கொண்டிருக்கிறாய் என்று கூறி அவரது போனில் என்னையும், பேருந்தையும் போட்டோ எடுத்தார். நான் ஏன் போட்டோ எடுக்குறீர்கள் என்று கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி ஏண்டா புண்டா மகனே என்று உன்னையும், பேருந்தையும் போட்டோ எடுத்து வாட்ஸ் ஆப்பிலும், செய்தி தாளிலும் போட்டு ஓட்டை பஸ்ஸை கொண்டு வந்ததாக சொல்லி உன்னை கேவலப்படுத்தாமல் விடமாட்டேன் என்றும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி கையில் அவர் அணிந்திருந்த காப்பை வைத்து இடது பக்க கண் புருவத்திற்கு மேல் குத்திவிட்டார். அதில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. பின்பு அருகில் இருந்த டாடா காபி எஸ்டேட்டில் இருந்த மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன். ஓட்டுநர் பேருந்தை பார்த்து ஏற்பாடு செய்து விட்டு வருவதாக சொன்னார். பின்பு எனது போன் மூலம் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வால்பாறை அரசு மருத்துவமனைக்கு வந்தேன். நான் வால்பாறை அரசு மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டார்கள். வால்பாறை போலீசார் அங்கு வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது. **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்பு மேல் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் சில்வர் காப்பை வைத்து தான் ஆஜர் எதிரி என்னை தாக்கினார். **(அந்த சில்வர் கை காப்பு அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் PR.No.12/2025 ஆகும்.)** அதன் பின்னர் சாட்சி தனது இடது பக்க நெற்றி பகுதியை தொட்டுக்காட்டி எதிரி தாக்கியதில் கண் புருவ எலும்பில் ஓட்டை விழுந்ததாகவும், அதனால் தனது வலது பக்க நெற்றியை விட இடது பக்க நெற்றியில் பள்ளம் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார். மேற்படி காயத்தினால் கண் அருகில் வீங்கி கண்ணை திறக்க இயலாமல் நான் தொடர்ந்து பணிக்கு செல்ல இயலாமல் கண் பார்வை பாதிக்கப்பட்டிருக்கும் என்று கருதி மதுரை அரவிந்த கண் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அங்குள்ள மருத்துவரின் அறிவுரையின் படி எலும்பு பாதிக்கப்பட்டிருக்கும் என்று கருதி மதுரை அப்போலே மருத்துவமனையில் எலும்பு மருத்துவ நிபுணரிடம் காண்பித்து சிகிச்சை மேற்கொண்டேன். அதனால் 2 மாதங்கள் மருத்துவ விடுப்பில் இருந்து வேலைக்கு செல்ல இயலாமல் சிகிச்சை பெற்று வந்தேன். அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

( அரசு தரப்பில் அ.சா.1-னிடம் உள்ள ஆவணங்களை சமர்ப்பிப்பதற்காக கால அவகாசம் வேண்டிக் கொண்டதின் படி அ.சா.1-னின் முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.